தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-8-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 70வது சுதந்திர தினவிழா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 70வது சுதந்திர தினவிழா இன்று (15-8-2016) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் கு. இராமசாமி அவர்கள் தேசியக் கொடி ஏற்றி சுதந்திர தினவிழா உரையாற்றினார்.

இந்தியத் தலைவர்களின் தியாகங்களை துணைவேந்தர் தமது உரையில் நினைவு கூர்ந்தார். தேசிய கவி கூறியது போல ஒற்றுமை மட்டுமே நமது சுதந்திரத்தைத் தக்க வைக்கும் என எடுத்துரைத்தார்

இந்தியா சுதந்திரம் அடைந்த நாள் முதல் நாம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று அனைவருக்கும் உணவு அளிக்கும் நிலையடைந்தோம். உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பையும் தற்போதுள்ள தேசத்தின் எதிர்பார்ப்பையும் சுட்டிக்காட்டினார். தானியம் மற்றும் பயறு உற்பத்திற்க்காக தமிழகத்திற்கு மூன்றாவது முறையாக க்ரிஷி கர்மன் விருதை மத்திய அரசு வழங்கியுள்ளது. வேளாண்மையில் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பைப் பராட்டி பசுமை புரட்ச்சியின் பொன் விழா விருதை மத்திய அரசு வழங்கியதை பெருமையுடன் நினைவு கூர்ந்தார்.

மக்களின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்காக நாம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்போடு செயல்படவேண்டுமென்று அனைவருக்கும் அரைகூவல் விடுத்தார். பன்னாட்டு பயறுவகை ஆண்டையொட்டி பயறு உற்பத்தியைப் பெருக்க தரமான விதைகளை உற்பத்தி செய்து உழவர்களுக்கு வழங்க விஞ்ஞானிகள் உறுதிகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அறிவே தேசத்தின் சொத்து என்பதால் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் ஆசிரியர்களும் கடுமையாக உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அனைத்து தொழில் நுட்பங்களும் சிறு மற்றும் குறு விவசாயிகளையச் சென்றடைவதின் அவசியத்தை எடுத்துரைத்தார். துணைவேந்தரது, சுதந்திர தினவிழா உரை அனைவரின் கவனத்தையும் ஈர்த்து தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக அமைந்தது.

முன்னதாக பல்கலைக்கழகத்தின் தேசிய மாணவர் படை மாணவர்கள் அளித்த வரவேற்பு மரியாதையை ஏற்றார். மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள்அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டது. குறிப்பாக இந்திய மிலிட்டரி அக்கடமி டேரடுனில் சிறப்பு பயிற்சி பெற்ற மாணவர் சண்முகராஜிற்கு சிறப்பு பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்,

இந்நிகழ்ச்சியில் சுமார் **300**க்கும் மேற்பட்ட மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்குள் செயல்படும் ஆரம்ப பள்ளி சிறார்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்